C.C. 297 of 2017 Previous Date : 02.05.2019

PW1
முருகன் த/பெ.பொன்நாடார்

Accused absent. 317 Cr.P.C. Petition filed and allowed.

04.07.2025

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு எந்த ஊர் என்றால் அக்கமநாயக்கன் புதூர். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் மிச்சர், முறுக்கு வியாபாரம் செய்கிறேன். நான் கடையாக வைத்துள்ளேனா என்றால் இல்லை. எனது இருசக்கர வாகனத்தில் கொண்டு சென்று கடைகளுக்கு விற்பனை செய்வேன். இறந்துபோன நபர்கள் சக்திவேல் மற்றும் வரதராஜ் ஆகியோர் எனது ஊர்காரர்கள் என்றால் சரிதான். சக்திவேல் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நாளன்று நான் என்னுடைய வாகனத்தில் கடைகளுக்கு பொருட்கள் போடுவதற்காக போய்கொண்டிருந்தேனா என்றால் ஆமாம். என்னுடைய இருசக்கர வாகனத்தில் பின்னால் முழுவதும் திண்பண்ட பொருட்கள் வைத்திருந்தேனா என்றால் ஆமாம். எனக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் ஒரு வளைவு பகுதி என்றால் ஆமாம். அந்த இடத்தில் சாலையில் இருபுறமும் மரங்கள் மற்றும் வளர்ந்த புதர்கள் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் சாலை கொஞ்சம் குறுகலாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் வாகனத்தை யார் ஓட்டி சென்றார் என்றால் சக்திவேல் ஓட்டி சென்றார். சக்திவேல் ஓட்டி வந்த வாகனத்தில் மோதியதாக சொல்லும் வாகனத்தை யார் ஒட்டி வந்தார் என்றால் ஒரு பெரியவர் ஓட்டி வந்தார். நான் தான் காவல் நிலையத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். இறந்துபோன நபர்களின் அப்பா, அம்மா போன்ற நபர்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். நான் தான் புகார் கொடுத்தேன். இந்த வழக்கில் இறந்துபோன சக்திவேல் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது உடன்பிறந்த அக்கா மகன். எனது உடன் பிறந்த அக்காவான சக்திவேலின் அம்மா பெயர் என்ன என்றால் பாப்பா. நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், இறந்து போன சக்திவேல் எனது அக்கா மகன் என்பதாலும், மற்றொருவர் எனது ஊர்க்காரர் என்பதாலும்

அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. அதனால் தான் 3.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளதில் 9.00 மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் நான் மருத்துவமனைக்கு எல்லாம் சென்றுவிட்டு அதன் பிறகு புகார் கொடுத்தேன். அந்த இடம் குறுகலான வளைவு என்பதால் நான்கு சக்கர வாகனம் மெதுவாக தான் வந்திருக்க வேண்டும் என்றாலும் எனது அக்கா மகன் தான் மதுபோதையில் சென்று விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இழப்பீடு வழக்கு தாக்கல் செய்வதற்காக பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சக்திவேல் ஓட்டி வந்ததாக சொல்லும் வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் சீனிவாசனுக்கு சொந்தமானது. அந்த சீனிவாசனின் தந்தை ராஜு என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அந்த குறுகலான சாலையில் நான் ரோட்டின் வலதுபக்கம் ஏறி வந்ததால் என்னுடைய கவனக்குறைவாலும், எனது வண்டியில் அதிக சுமை இருந்ததாலும் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் 100 அடி வித்தியாத்தில் தான் சென்று கொண்டிருந்தேன். நான் 100 அடி வித்தியாத்தில் சென்றதால் அது வளைவு பகுதி என்றதால் யாருடைய கவனக்குறைவில் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். இறந்துபோன சக்திவேலின் செயலால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் அப்படி சொல்ல முடியாது. நான் சீனிவாசன், மணிகண்டன், செல்லதுரை ஆகியோர் ஒரே ஊர்க்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இழப்பீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சக்திவேல் மற்றும் வரதராஜன் ஆகியோர்களின் உறவினர்கள் பணம் பெற்று கொண்டார்கள் என்றால் ஆமாம்.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.07.04 17:35:13 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.